மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை அவர்களின் நவடிக்கைகள்,
முன்னிலை : திரு, எஸ். தனராசு. பி.இ.,

திருவள்ளுவர் ஆண்டு 2052, பிலவ வருடம், சித்திரை திங்கள் 02-ஆம் நாள்

ந.க.எண்.422/2021/புமா

அய்யா, நாள்.15.04.2021.

பொருள் கட்டிடம் - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம் - குளத்தூர் வட்டம் - வெள்ளனூர் கிராமம் சர்வே எண்.300/3 ல் 2.50.0ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படவுள்ள உத்தேச மனையிடத்தில் தரைதளம் மற்றும் 2 தளங்களுடன் கூடிய 528 தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்ட தொழில்நுட்ப அனுமதி வழங்குவது - தொடர்பாக.

பார்வை

1. செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அவர்களின் கடிதம் எண்.1669/JE(P)/2018, நாள்.23.03.2021.
2. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.இ5/10018/2020 நாள்.16.02.2021.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றிக்கை ந.க.எண். 4367/2019- ந.ஊ.2 நாள்,31.10.2019.
4. அரசாணை நிலை எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.28.03.2012.
5. மனுதாரர் கூராய்வு கட்டணம், நன்னிலை வரி கட்டணம் மற்றும் விளம்பரப்பலகை கட்டணம் செலுத்தப்பட்ட இரசீது இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்த நாள்.15.04.2021, 15.04.2021 மற்றும் 15.04.2021.

---

**உத்தரவு**

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், வெள்ளனூர் கிராமம் சர்வே எண்.300/3 ல் 2.50.0ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படவுள்ள உத்தேச மனையிடத்தில் தரைதளம் மற்றும் 2 தளங்களுடன் கூடிய 528 தொகுப்பு குடியிருப்புகள் கொண்ட மனையிடத்திற்கு A முதல் F என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் அமையும்,

கட்டிட பரப்பு விவரம்

| தள விவரம் | தரைதளம் (ச.மீ) | முதல்தளம் (ச.மீ) | 2-ம் தளம் (ச.மீ) | மொத்த பரப்பு (ச.மீ) | குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| Blocks (01-22) | 6661.16 | 6661.16 | 6661.16 | 19983,48 | 528Nos |
| Total Area | 6661.16 | 6661.16 | 6661.16 | 19983.48 | 528Nos |

FSI Area - 0.799 Plot coverage - 26.64%

EXECUTIVE ENGINEER
T.N. Urban Habitat Development Board
Trichy Division, Tiruchirappalli

(27)

பரப்பளவு கொண்ட உத்தேச குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு பார்வை 3-ல் கண்ட அதிகாரப் பகிர்மானத்திற்கு உட்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மனைஒப்புதல் மற்றும் கட்டிட வரைபடத்திற்கு க.வ/மா.ந.ஊ.அ.(பு.மா)எண்-01/2021 என எண்ணிடபட்டு 15.04.2021 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்**

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundation.

2. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning permissions is issued subject to the condition that the applicant / developer and also the architects/ Licensed Surveyors' and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

3. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதி படுத்தவில்லை, தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது, அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது, சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும். விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீதுள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும், மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம், இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

4. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில் பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் வளர்ச்சிக் கட்டுபாட்டு விதிகளின்படி தளப்பரப்பு விகிதம் (FSI) திறவிடங்கள் (Setback) வாகன நிறுத்துமிடம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

5. கட்டிடம் கட்டும்போது அரசு அனுமதி பெற்ற வயரிங் காண்ட்ராக்டர் மூலமாக வயரிங் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

EXECUTIVE ENGINEER
T.N. Urban Habitat Development Board,
Trichy Division, Tiruchirappalli-8

7. குளத்தின் எல்லையில் இருந்து 3மீ இடைவெளி விட்டு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.

8. OSR (Park) என ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

**நிபந்தனைகள்**

1) உத்தேச குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar System அமைக்கப்பட வேண்டும்.

2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எந்த மாற்றமும் செய்யக்கூடாது, மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் அலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அரசாணை எண்,138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002 - ன்படி கட்டடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியாக வாகனங்கள் மூலம் வெளியேற்றவும். உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8) உத்தேச கட்டுமானத்தின் விதிப்படித் தேவையான அளவிற்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9) அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள் 03.11.2004-ன்படி செப்டிக் டேங்கில் U' Trap அமைத்தல் வேண்டும்.

10) சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

EXECUTIVE ENGINEER
T.N. Urban Habitat Development Board,

11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது உத்தேச நிலத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

12) உத்தேச கட்டிடத்தின் கழிவுநீர் வெளியேறுதல் தொடர்பாக - STP Design- ற்கு தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரிய சட்டம் 1974 பிரிவு 25(Water Act ) -ன்படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்,

மனைகளுக்கான நன்னிலை வரி மற்றும் இதர கட்டணங்களை உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை அவர்களால் மனுதாரரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது,

ஒப்புதலளிக்கப்பட்ட உத்தரவு நகல் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச் சான்று அனுப்புமாறு தலைவர், வெள்ளனூர் ஊராட்சி, குளத்தூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்,

15/4/24

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
புதுக்கோட்டை.

15/4/24 15/4/24

**இணைப்பு**
உத்தரவு மற்றும் இருதொகுப்பு
வரைபடங்கள்,

**பெறுநர்**
தலைவர்,
வெள்ளனூர் ஊராட்சி,
குளத்தூர் வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

**நகல் ( பத்தி ஒன்று மட்டும் )**

1. The Executive Engineer,
   TamilNadu Slum Clearance Board,
   Trichy Division, Madurai road,
   Palakarai, Trichy-20.

2. தொழில்நுட்ப வைப்பறை - ஒரு தொகுப்பு வரைபடத்துடன்.

EXECUTIVE ENGINEER
T.N. Urban Habitat Development Board,
Trichy Division,Tiruchirappalli - 8.

அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம்
நாள்: 29/9/22
வெள்ளனூர் ஊராட்சி

## வரைபட அங்கீகாரம் அளித்து உத்தரவு

அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம் வெள்ளனூர் ஊராட்சி /வெள்ளனூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திருமதி: வே.பார்வதி வேலுச்சாமி.

அனுமதி ஆணை எண்: 18 நாள்:29.09.2022

பொருள்: வரைபடம் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம் வெள்ளனூர் ஊராட்சி சர்வே எண்: 300/3, - ல் புதிய கட்டிடம் கட்டுவதற்கு வரைபட அங்கீகாரம் அளித்து உத்திரவிடல் - தொடர்பாக.

பார்வை: 1. அரசாணை எண்: 256, நாள்: 18:08:1997
2. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்
விண்ணப்ப நாள் :

ஆணை:

கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குக்குட்பட்டு அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம் வெள்ளனூர் ஊராட்சி தாவுதுமில், ரெங்கம்மாள் சத்திரம் சர்வே எண்: 300/3-ல் 2.50.0 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தாள் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களில் 528 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டிடம் கட்டிக்கொள்ள ஊராட்சியின் மூலம் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்படுகிறது.

பார்வையில் காணும் நபர் சலான் எண்: 984078 / நாள்: 29.09.2022 மூலம் ரூபாய் 2085123/- (இருபது லட்சத்து எண்பத்து ஐந்தாயிரத்து நூற்று இருபத்து மூன்று) மட்டும். செலுத்தியுள்ளார்கள்.

நிபந்தனைகள்:

1. இந்த அனுமதி 29.09.2022 காலத்திற்கு 28.09.2023-ம் தேதிமுடிய அமுலில் இருக்கும்.

2. இத்துடன் அங்கீகாரம் செய்து அனுப்பப்பட்டிருக்கும் வரைபடத்தின்படி கட்டிடம் கட்ட வேண்டும். மேற்படி வரைபடம் சம்மந்தப்பட்ட இடத்தில் அலுவலர்கள் பார்வையிடும்படி தொங்கவிட வேண்டும்.

3. இப்போது கட்டப்போகும் கட்டிடத்தில் வேறு எந்தவிதமான அபிவிருத்தியோ அல்லது மாறுதலோ செய்து கட்ட வேண்டுமானால், அதற்குரிய சீர்திருத்தப்பட்ட வரைபடங்களுடன் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகுதான் கட்டிடம் கட்டவேண்டும்.

4. சமையறை, குளியல் அறை முதலியவைகளுக்கு புகைப் போக்கி முதலியவைகள் போதியபடி அமைக்கவேண்டும்.

5. மேற்கூரை தண்ணீரை தகுதியான குழாய்கள் மூலம் ஊராட்சி வாய்க்காலில் கொண்டுவிட வேண்டும்.

6. மழைநீர் சேகரிப்பு அமைப்பு கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்.

7. இந்த உத்தரவு 1 வருடத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும். கட்டிட கட்டுமானப் பணி, நிலுவை இருக்கையில் மீண்டும் 1 வருடத்திற்கு அனுமதி பெற வேண்டும்.

8. கட்டிட வரைபட அனுமதிகுறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது கட்டிடம் கட்டுவதற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இந்த கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

பெறுநர்:

நிர்வாக செயற் பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்,
திருச்சிராப்பள்ளி கோட்டம்,
மதுரை ரோடு, பாலக்கரை,
திருச்சிராப்பள்ளி - 8.

V. Parvathi Velusamy
தலைவர்
ஊராட்சி மன்றம்,
வெள்ளனூர்.

EXECUTIVE ENGINEER
T.N. Urban Habitat Development Board,
Trichy Division, Tiruchirappalli - 8.